# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்

## 06.03.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். அவற்றில் ஜமாஅத்தின் நிர்மாணம் குறித்தும் கூறியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்களின் பொறுப்புகள் பற்றியும் கவனமூட்டியுள்ளார்கள்.

இந்த பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்வதன் விளைவால் அல்லாஹ்வின் அருள்கள், அல்லாஹ் நம்மிடம் வாக்களித்தவை நமக்கு கிடைக்கும். இந்த ஜமாஅத்தினை அல்லாஹ் எந்த நிலை வரை கொண்டு செல்வான் என்பது பற்றியும் கூறியுள்ளார்கள். அன்னாரின் கூற்றுகளிலிருந்து சில விஷயங்களை இப்போது நான் உங்களிடம் எடுத்து வைப்பேன். அதன் மூலம் நமது பொறுப்புகள் மீது நமக்கு ஒரு கவனம் ஏற்படும். அல்லாஹ்வின் நெருக்கம், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்கள் ஆக முடியும்.

ஜமாஅத்துடன் இருக்கிற அனைத்து அருள்களுக்கும் நாம் அதன் மூலம் வாரிசாக முடியும்.

இந்த இயக்கத்தின் நோக்கம், இலட்சியங்களை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள். இக்காலம் ஓர் ஆன்மீகப்போர் நடக்கும் காலமாகும். ஷய்த்தானுடன் யுத்தம் ஆரம்பமாகி உள்ளது. ஷய்த்தான் தனது பரிவாரங்களுடன் இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடங்கியுள்ளான். இஸ்லாத்தை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று அவன் விரும்புகிறான். ஆனால் ஷய்த்தானை நிரந்தரமாக தோல்வியடையச் செய்வதற்காக இக்காலத்தின் இவ்வியக்கத்தை அல்லாஹ் உருவாக்கியுள்ளான்.

அன்னார் கூறுகின்றார்கள்: இதனைப் புரிந்து கொண்டவர் நற்பேறுடையவர். அல்லாஹ்வுடைய பெரும் கருணை, உபகாரம் அவன் நம்மை இவ்வியக்கதில் சேரும் வாய்ப்பை வழங்கியுள்ளான். நம்மில் சிலருக்கு அவர்களது பெரியோர்களின் நன்மையின் விளைவால் இவ்வியக்கத்தைப் பற்றி புரியும் ஆற்றலை வழங்கியுள்ளான். சிலருக்கு அல்லாஹ் செய்த அருளின் காரணத்தால் அவர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். இந்த இயக்கம் இவ்வாறு இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்-ா அல்லாஹ் தொடரும். அதன் மூலம் நாம் அந்த உயரிய கூட்டமாகிய ஷய்த்தானுடன் நடக்கும் அந்த இறுதிப்போரில் ஷய்த்தானுக்கு எதிராக போரிட்டு அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் கூட்டத்தில் இணைய முடியும். இதன் காரணமாக நம்முள் சிலருக்கு சில நாடுகளில் சோதனைகளை சந்திக்க நேரிடுகிறது. நாம் இக்காலத்தின் இமாமை ஏற்றதற்காக அந்த சோதனை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் ஓர் உயரிய நோக்கத்தை அடைவதற்காக நாம் செய்யும் முயற்சியில் நமது இலக்கிற்கு முன்பாக நமது தியாகம் ஒரு பொருட்டல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை எப்போதும் இந்த சோதனைகளைக் குறித்து நமக்கு விழிப்புணர்வூட்டியே வந்துள்ளார்கள். அன்னாரது எண்ணற்ற படைப்புகள், சோதனைகள் பற்றி கூறுபவை இன்றும் நம்மிடம் உள்ளன. நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். பிறகு அதன் விளைவாக நற்செய்தியும் கிடைத்துள்ளது.

அன்னார் கூறுகிறார்கள். இக்காலத்தில் என்னை ஒப்புக் கொள்பவருக்கு வெளிப்படையான முறையில் முதலில் தனது நஃப்ஸுடன் ஒரு யுத்தத்தை செய்ய வேண்டியுள்ளது. சில நேரங்களில் அவர் தமது உறவினர்களை விட்டும் பிரிக்கப்படுவர். உலகியல் தொழில் துறைகளில் அவர்களுக்கு தடை ஏற்படுத்தப்படும். ஏச்சுப்பேச்சுகள் கேட்க வேண்டியிருக்கும். சாபங்களை கேட்க நேரிடும். ஆனால் இந்த அனைத்து கஷ்டங்களின் கூலி அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும்.

இன்று இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய வார்த்தைகள் சில நேரங்களில் முழுமையாக நிறைவேறியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. இன்றும்கூட அஹ்மதிகள் தியாகம் செய்து வருகின்றனர். நிச்சயமாக அவர்கள் அதற்கான கூலியைப் பெறுவார்கள்.

இந்நாட்களில் குறிப்பாக பாகிஸ்தானிலும், அதற்கு அடுத்தபடியாக இந்தியாவிலும் அஹ்மதியல்லாதவர்கள் புது அஹ்மதிகளின் மீது பெரும் பெரும் அநீதிகளை கட்டவிழ்த்து விடுகின்றனர். குறிப்பாக இந்தியாவில் நடக்கிறது. பாகிஸ்தானில் புதிய ஆட்சி அமைந்த பிறகு எல்லா வகையான வரம்புமீறல்கள், அநீதிகள் இழைக்கப்படுகின்றன. மவ்லவிகளுக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மவ்லவிமார்களின் கட்டளையினால் நடக்கின்ற அவர்களின் திட்டங்கள் மிகப் பயங்கரமாக உள்ளன.

இங்கு சட்டம் ஒழுங்கே இல்லாமல் போய் விட்டது. அஹ்மதிகளுக்கு பாதுகாப்பு உதவிகள் செய்வதற்கு இந்த சட்டங்களிடம் எந்த தகுதியும் இல்லை.

அல்லாஹ்வின் ஓர் அருள் என்னவெனில் எப்போதெல்லாம் இவர்கள் ஜமாஅத்தின் மீது எதிர்ப்பை கிளப்புவார்களோ அப்போதெல்லாம் அல்லாஹ் அதனை அவர்கள் மீதே திருப்பி விடுகின்றான்.

கடந்த சில வருடங்களாக நாம் அதனை கண்டு வருகிறோம். இந்த நாட்களில் வெளிப்படையாக அது தான் இப்போதும் காணப்படுகிறது. ஒரு சதித்திட்டத்தை ஜமாஅத்தின் மீது அவர்கள் செயல்படுத்த நினைத்த போது அல்லாஹ் அதனை அவர்கள் மீதே இழுத்துப்போட்டு விட்டான். அவர்களே அதனை சந்திக்க வேண்டி வந்தது. அஹ்மதிகள் எங்கெல்லாம் அநீதிக்கு இலக்காகின்றார்களோ அவர்கள் நினைவில் கொள்ளட்டும். இது ஷய்த்தானுடன் நடக்கும் இறுதி யுத்தமாகும். அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்காக இந்த இராணுவத்தில் இணைந்துள்ளீர்கள். அந்த இராணுவத்தை இக்காலத்தின் இமாம் உருவாக்கியுள்ளார்கள். எனவே உங்கள் ஈமானை உறுதிப்படுத்தியவாறு அல்லாஹ்விடம் உறுதியான பாதத்தையும் நிலைநிற்றலையும் கேட்டவாறு பொறுமை, தைரியத்துடன் இருங்கள். எப்போதும் அல்லாஹ்வின் முன் அதிகமாக குனியுங்கள். இன்ஷா அல்லாஹ் இறுதி வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு உரியதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இந்த ஷய்த்தானிய ஆற்றலுக்கு தோல்வியை வழங்குவதற்காகவே அல்லாஹ் இந்த ஜமாஅத்தினை நிலைநாட்டியுள்ளான்.

ஆனால், ஒரு விஷயம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். வெளிப்புறத்திலுள்ள ஷய்த்தானை தோல்வியடையச் செய்வதற்கு முதலில் உட்புற எதிரிகளாகிய உட்புற ஷய்த்தானை ஜெயிக்க வேண்டும். ஏனெனில் நமது வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்திருப்பதனால் கிடைக்குமேயல்லாது வெளிப்புறக் காரணிகள் கொண்டு கிடைக்கக் கூடியதல்ல. மாறாக, துஆவைக் கொண்டு அவ்வெற்றியை நாம் வேண்ட வேண்டும். உங்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராக ஆக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக நஃப்ஸுடன் ஜிஹாத் செய்வது மிக மிக அவசியமாகும்.

**இதுபற்றி அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

நஃப்ஸின் நோக்கங்கள் ஷிர்க் ஆகும். உள்ளத்தின் மீது ஒரு திரையைப் போட்டு விடுகின்றன. மனிதன் பைஅத் செய்திருந்தாலும் மனிதனை தடுமாற வைத்து விடுகின்றன. அதாவது நஃப்ஸின் நோக்கங்கள் ஷிர்க் ஆகும். பைஅத் செய்திருந்த போதிலும் அவரது உள்ளத்தில் திரையைப் போட்டு விடுகின்றன. யோசித்துதான் மனிதன் பைஅத் செய்கிறான். இருந்தும் சில நேரங்களில் அவன் கழிவிரக்கம் கொண்டு தவ்பா செய்யத்தக்க செயல்கள் அவனிடம் ஏற்பட்டு விடுகின்றன. நமது இயக்கம் மனித தீய விருப்பங்களை விட்டு விட்டு களங்கமற்ற தவ்ஹீதின் மீது காலெடுத்து வைக்க வேண்டும். ஆகவே, ஓர் அஹ்மதியின் கடமை எல்லா விதமான நஃப்ஸின் தீய விருப்பங்களிலிருந்தும் உள்ளத்தை தூய்மையாக்கி அல்லாஹ்வுடைய தவ்ஹீதை நிலைநாட்ட வேண்டும்.

மேலும் அன்னார் கூறுகிறார்கள்: பைஅத் செய்திருந்த போதிலும் சிலர் தடுமாறி விடுகின்றனர். காரணம் அவர்கள் இந்த இயக்கத்தில் பைஅத் செய்து இணைந்ததன் நோக்கத்தைப் புரியவில்லை. அந்த நோக்கம், ஒருவர் தம்மை முழுமையாக அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுவதும், தமது உள்ளத்தை எல்லா விதமான ஷிர்க்கிலிருந்து தூய்மைப்படுத்துவதும் ஆகும்.

மேலும் கூறுகின்றார்கள்: அல்லாஹ் தக்வா, தூய்மையின் ஒரு முன்மாதிரியை உலகிற்குக் காட்ட விரும்பினான். இந்த நோக்கத்தில்தான் இந்த இயக்கத்தை உருவாக்கினான். ஒரு தூய ஜமாஅத்தை உருவாக்குவது அவனது நோக்கமாகும். எனவே இன்று உலகின் தீமைகள் கிளர்ந்து நிற்கின்றன. அல்லாஹ்வின் மீதுள்ள கடமையின் மீது மக்களுக்கு கவனமில்லை. அடியார்களின் உரிமை பற்றியும் கவலையில்லை. ஃபித்னா – குழப்பம் எல்லா இடத்திலும் பரவியுள்ளது. முஸ்லிம்கள், பிற முஸ்லிம்களின் கழுத்துக்களை அல்லாஹ்வின் பெயரால் வெட்டுகின்றனர்; மார்க்கத்தின் பெயரால் வெட்டுகின்றனர். ஒருபுறம் இஸ்லாத்தின் பெயரால் இஸ்லாத்தினால்தான் எமக்கு இந்த நாடு கிடைத்துள்ளது என்று முழங்கப்படுகின்றது. மறுபுறம் மார்க்கத்தின் பெயரால் சுயநோக்கங்களுக்காக கலிமா சொன்னவர்களின் இரத்தங்களை துப்பாக்கி குண்டுகளால் சிதறடிக்கிறார்கள். இன்று உலகில் பாகிஸ்தானின் காட்சி அநீதியின் வடிவமாகவே தென்படுகிறது. அல்லாஹ் நமது நாட்டின் மீது கருணை காட்டுவானாக. இந்நாட்டிற்காக ஜமாஅத் பெரும் தியாகங்களைச் செய்துள்ளது. ஒவ்வொரு பாகிஸ்தான் அஹ்மதியும் அதனை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாட்டைப் பற்றி ஒருவர் சிந்திக்கத் தொடங்கினால் அநீதி, கட்டுப்பாடின்மை, தீமைகள் நிரம்பி, விரவி காணப்படுவதை உணர முடியும். அதிலிருந்து இன்று எவர் பாதுகாப்பாக இருக்க முடியும்? ஆனால் இன்று இதில் ஒரு கப்பல் மட்டும் பாதுகாப்பாக உள்ளது. அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய கப்பல் ஆகும். அல்லாஹ்வின் அருளால் இன்று நாம் அந்தக் கப்பலில் ஏறியுள்ளோம். எனவே சிறப்பான முயற்சியால் நாம் நம்மை அதில் இருப்பதற்கு தகுதி உடையவராக்க வேண்டும். அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு இந்த சமுதாயத்திற்காக நாம் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

அறிவைப் பயன்படுத்துங்கள். இந்த பெயர்தாங்கி தலைவர்களின் பின் சென்று உங்கள் வாழ்வையும், நாட்டின் வாழ்வையும் அழித்துக் கொள்ளாதீர்கள்.

எவ்வாறிருப்பினும் அஹ்மதிகளாகிய நமக்கு இன்று இரண்டு முக்கிய பொறுப்புகள் உள்ளன. குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகள். அங்கு நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. அதுமட்டுமின்றி உலகில் எங்கெல்லாம் அஹ்மதிகள் மீது அநீதியிழைக்கப்படுமோ அங்கு இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

சில அஹ்மதிகள் சூழ்நிலை காரணமாக தமது பொறுப்பை மறந்து விடுகின்றனர். உலக வேலைகளில் அதிகம் மூழ்கிவிடுகின்றனர். பல புகார்கள் வருகின்றன. ஜமாஅத்தின் நடைமுறை, இஸ்லாமியப் போதனைகளை அவ்விடங்களில் சரிவர கவனத்தில் கொள்ளப்படவில்லை. தவ்ஹீதை நிலைநாட்ட மிக முக்கியப் பணி மனிதனது பிறப்பின் நோக்கமாகிய இபாதத், தொழுகைகளில் பேணுதல் இவற்றில் முழுமையாக கவனம் காணப்படவில்லை.

எனவே மிகவும் கவலைப்பட வேண்டிய இடம் என்னவெனில், நமது பலவீனம் காரணமாக இவர் உனது குடும்பத்தைச் சார்ந்தவரில்லை. **லைஸ மின் அஹ்லிக்க இன்னஹூ அமலுன் கைரு சாலிஹ்** – நிச்சயமாக இவரது செயல் சாலிஹான (நற்செயலான)தாக இருக்கவில்லை என்று கூறப்பட்டவர்கள் போன்று ஆகி விடக் கூடாது. அல்லாஹ் நம்மை அவ்வாறு ஆக்கிவிடாதிருப்பானாக. நமது எந்த செயலும் அல்லாஹ்வின் பார்வையில் அப்படி இருந்துவிடக் கூடாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அவனது பார்வையில் சாலிஹான செயல்களாக இருப்பவற்றை செய்பவராக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. நாம் நமது தீய செயல்களால் நமது நன்மைகளை அழித்து நமது தகுதியை நாமே இழப்பிற்காளாக்கியவர்களாகி விட வேண்டாம்.

மாறாக, இக்காலத்தில் காலத்தின் இமாம் நம்மிடம் எதிர்பார்க்கின்ற நன்மைகளைச் செய்பவராக நம்மை ஆக்குவானாக.

அன்னார் கூறுகின்றார்கள். எனது ஜமாஅத் எதுவரை தக்வாவை கைக்கொள்ள வில்லையோ, அதுவரை ஈடேற்றம் பெற இயலாது. இறைவன் அவரை தனது பாதுகாப்பில் எடுக்கவே மாட்டான். இறைவன் இந்த ஜமாஅத்திற்கு வாக்குறுதியளித்துள்ளான். இந்த (பிளேக் என்ற) துன்பத்திலிருந்து பாதுகாப்பான். ஆனால் அதற்கும் ஒரு நிபந்தனை உள்ளது.

**லம் யல்பிஸூ ஈமானஹூம் பிளுல் மின்** – தமது ஈமானை அநீதியுடன் கலந்து விடாதவர்களாக இருப்பவர்களை மட்டுமே பாதுகாப்பாக இருப்பார்கள். இக்காலத்தில் பல தொல்லைகள், துன்பங்கள் ஒவ்வொரு அடியிலும் காணப்படுகின்றன. அதிலிருந்து தப்புவதற்கும்கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய இந்த நிபந்தனைதான் பயனளிக்கும். மேலும் அல்லாஹ் அத்தார் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வீடு) பற்றி வாக்களித்துள்ளான். அந்த வீட்டிலுள்ளவர்கள் பாதுகாக்கப்படுவர். அதிலும்கூட இதே நிபந்தனை உள்ளது. **இல்லல்லதீன அலவ் மின் இஸ்திக்ஃபாரின்** – இதில் அலவ் என்பதன் பொருள் முழுமையான கட்டுப்படுதல். சின்னஞ்சிறு கட்டுப்பாடின்மை கலக்காத ஈமான் என்பதாகும்.

எதுவரை மனிதன் நல்லெண்ணம் என்ற உண்மையான சிரம்பணிதலை – சஜ்தாவை செய்யவில்லையோ அதுவரை அவர் **தார்** என்ற எனது வீட்டில் இல்லை. அப்படிப்பட்ட நபர், தாம் மூஃமினாக இருப்பதாக வாதிப்பது அர்த்தமற்றதாகும்.

உண்மையான கட்டுப்படுதல் இல்லையெனில் எல்லா வாதங்களும் தவறாகும். எனவே இந்த தகுதிதான் நம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தக்வாவின் வழியில் செல்வதற்கு முயற்சி, கட்டுப்படுதல், எல்லா உயர் தகுதிகளும் பெற முயற்சி ஓர் அஹ்மதிக்கு தேவை. இவைதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இட்டுச் செல்ல விரும்புகிற தகுதிகளைப் பெறுவதற்கு நமக்கு அவசியமானவையாக விளங்குகின்றன.

**இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத், ஒரு மரணத்தை ஏற்றுக் கொள்ள விரும்பினால்தான் அது ஜமாஆத் ஆக முடியும். நஃப்ஸின் தீய விருப்பங்களிலிருந்து விலகுங்கள். ஒவ்வொரு விஷயத்திலும் அல்லாஹ்வுக்கு முதன்மை வழங்குங்கள். பெரும்பாலான காட்டுதல்கள் வீணான காரியங்களால் மனிதன் அழிந்து போகின்றான். எனவே, மனிதன் எப்போதும் தன்னை கணக்கெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நமது ஆய்வில் தென்படும் பலவீனங்களை சீர்திருத்த முயல வேண்டும்.

ஒவ்வொருவரின் நஃப்ஸும் சீர்திருத்தத்தின் பக்கம் திரும்ப வேண்டும். தாமே தம்மை ஆய்வு செய்ய வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நம்மிடம் பிடிவாதம் இல்லாமல் இருந்தால்தான் சீர்திருத்த முயற்சி பயனளிக்க முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் நாம் இணைந்ததில் நமக்கு ஒரு சிறந்த நோக்கம் இருக்கின்றது என்ற உணர்வு வர வேண்டும். நமது வாழ்வின் தூய முன்மாதிரியை அடுத்தவர் முன் எடுத்து வைப்பதே அந்த நோக்கம்.

இறைவனது விருப்பத்தைப் பெறுவதற்காக அவனது கட்டளைகளின்படி அமல் செய்வது அந்த நோக்கம். இதுவே நமது சீர்திருத்தத்துடன் உண்மையான இஸ்லாத்தைப் பற்றி அடுத்தவருக்கு அறிமுகம் செய்யவும், வழிகாட்டவும் ஒரு வழியாக அமையும். ஒவ்வொரு அன்னியரும் உங்களைச் சந்திக்கும் போது உங்கள் முகத்தை நோக்குகிறார். உங்கள் நல்லொழுக்கம், பழக்கவழக்கங்கள், உறுதிப்பாடு, இறை கட்டளைகளில் பேணுதல் ஆகியவற்றைப் பார்க்கிறார். அவை எவ்வாறு இருக்கின்றன என்று கூர்ந்து நோக்குகிறார். அவை சரியில்லை எனில், உங்களைப் பார்த்து அவர் தடுமாறி விடுகின்றார். எனவே இதனை நினைவில் கொள்ளுங்கள்.

**பிறகு இன்னோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:**

இறைவன் ஒரு ஸாதிகின் (உண்மையாளர்களின்) ஜமாஅத்தை உருவாக்க விரும்புகிறான். எனவே, நாம் உண்மையின் முன்மாதிரியைக் காட்டுவது அவசியமாகும். **ஸித்க்** – உண்மை என்றால் என்ன? என்று விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

பொதுவாக மனிதன் நன்னம்பிக்கை, உண்மையை விரும்புகிறான். ஆனால் அதே நன்னம்பிக்கைதான் மனிதனுக்கு மகத்தான இறைவனைக் காட்டித் தருகின்ற உன்னதமான ஸித்க் என்னும் பண்பை மனிதனிடம் கொண்டு வருகின்றது. அப்போது மனிதன் இறைவனைப் பார்க்கின்றான். அப்போது இறைவனின் ஏகத்துவத்தின் ஞானம் கிடைக்கிறது. இந்த ஏகத்துவத்தின் ஞானம் மனிதனுக்கு கிடைக்கும் போது முழுமையான கட்டுப்படுதலின் பக்கமே அவனது பார்வை இருக்கும்.

அல்லாஹ்விடம் அன்பு கொள்ளும் ஞானம் கிடைக்கிறது. எல்லா ஷிர்க்கிடமும் வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ்வின் உண்மையான அடியான் ஆவதற்கான சரியான அறிவு கிடைக்கிறது. அல்லாஹ்வுக்காக பொறுமையுடன் எல்லா விதமான கஷ்டங்களையும் சகிக்க ஆற்றல் பிறக்கிறது. அல்லாஹ்வின் மீது தவக்குல் பிறக்கிறது. உயரிய நல்லொழுக்கத்தைப் பேண வாய்ப்பு ஏற்படுகிறது.

சுருக்கமாக, ஸித்க் –ன் உயரிய முன்மாதிரி, அல்லாஹ்வின் கடமை, அடியாரின் கடமைகளை நிறைவேற்ற அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் வழிகாட்டல் கிடைக்கின்றது.

இதுவே இந்த ஜமாஅத்தின் நோக்கம், இலட்சியம் குறித்த சுருக்கமன விளக்கமாகும்.

**இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் **ஸாதிகீன்**(உண்மையாளர்)களின் ஜமாஅத்தை உருவாக்குகிறான். நாம் இந்த இலக்கை கவனத்தில் கொண்டு நம்மை ஆய்வு செய்து பார்த்தால் நமக்கே பயம் ஏற்படும். பிறகு நாம் அந்நிலையில் இறைவன் பக்கம் ஓடிச் சென்றடைவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த வழியில் செல்வதும் எளிதான ஒன்றல்ல. எவ்வளவு தான் நாம் முயன்றாலும் அல்லாஹ்வின் அருள் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது. நம்மில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில், தக்வாவில் நடப்பவர்களாக இருப்பவர்களைச் சார்ந்தவர்களாகவும் மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், தீமையின் நெருப்பிலிருந்து ஜமாஅத்தைப் பாதுகாப்பாயாக என்று செய்த துஆவின் விளைவைப் பெறுபவர்களாகவும் தக்வாவில் நடப்பவர்களாகவும் தாம் செய்த பைஅத்திற்கேற்ப மார்க்கத்திற்கு உலகை விட முன்னுரிமை வழங்குபவர்களாகவும் ஆக்குவானாக.

நம்மில் ஒவ்வொருவரையும் மார்க்கத்தை விட உலகிற்கு முதன்மை வழங்குபவர்களாகவும் ஆக்குவானாக. அந்த முத்தகீன்களின் கூட்டத்தில் இணைப்பானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தை அன்னார் விளக்கியபடி புரிந்தவர்களாக ஆக்குவானாக. ஒருபோதும் தனது சுயநல நோக்கங்களுக்காக அல்லாஹ்வின் கட்டளைகளை அலட்சியம் செய்பவர்களாக ஆக்காதிருப்பானாக.

மற்றவருக்காக ஒரு முன்மாதிரியாக நம்மை ஆக்குவானாக. நமது சந்ததிகளும் கூட அவ்வழியில் நடந்து நமக்காக துஆ செய்பவர்களாக இருக்கும் அளவுக்கு முன்மாதிரியாக ஆக்குவானாக.

நம் மூலமாக அஹ்மதியானவர்கள் – உண்மையான இஸ்லாத்தை ஏற்றவர்கள் தமக்கு உபகாரம் செய்த நமக்காக துஆ செய்பவர்களாக இருக்கும் அளவுக்கு முன்மாதிரியாக ஆக்குவானாக. இன்னார் எங்களை அஹ்மதிய்யத் குறித்து அறிமுகம் செய்ததால் நாங்கள் ஏற்றோம் என்று அவர்கள் கூற வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் ஜமாஅத் கண்டிப்பாக வளரும்; மலரும். நாம் கடந்த 100 ஆண்டுகளாக இதனையே பார்த்தும் வருகிறோம். அல்லாஹ் தனது கையை இந்த ஜமாஅத்தின் மீது வைத்துள்ளான். ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான நல்லியல்பு கொண்டோர் ஜமாஅத்தில் இணைந்து வருகின்றனர்.

அல்லாஹ் புதிதாக சேர்ந்தவர்களுக்கும் உறுதியான பாதத்தை வழங்குவானாக. நன்றி உடையவர்களாகவும் கருணை காட்டுபவர்களாகவும் ஆக்குவானாக.

எங்கெல்லாம் ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ அங்கு பொறாமை என்ற தீயும் அதிகமாகிக் கொண்டேதான் செல்கிறது. இதனை முன்னர் பல சந்தர்ப்பங்களில் நான் விளக்கி விட்டேன். எப்போது எதிரிகள் ஜமாஅத்தை அழிக்க யோசித்துக் கொண்டும், இந்த ஜமாஅத் இப்போது அழிந்து விடும் என்று எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கின்றார்கள். அதற்காக கூச்சல் போட்டுக் கொண்டும் இருக்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் அருள் எப்போதும் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது. அல்லாஹ் இப்போது நம்மீது நமது குறைகளை மறைத்து அருள்புரிந்து வருகிறான். மேலும் அருள் செய்து வருவானாக. எதிரிகளின் ஒவ்வொரு தீய செயலும் செயலிழந்து போய்க் கொண்டே இருக்கட்டுமாக. நமக்கு முன் தென்படுகின்ற ஜமாஅத்தின் அனைத்து வெற்றிகளும் எதிரிகளுக்கும் தென்படுகின்றன. காரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் வாக்களித்துள்ளான். அந்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப அல்லாஹ் நமக்கு ஆறுதல் வழங்கி வருகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு காலம் வரும். ஜமாஅத் மிக உன்னத நிலையை அடையும். அது நமது காலத்தில் நடக்குமா? பிறகு நடக்குமா என்று நமக்குத் தெரியாது. அல்லாஹ் நம்மிடம் வாக்களித்துள்ளான். அரசர்கள் உமது ஆடையிலிருந்து பரக்கத்தை தேடுவார்கள்.

எனவே இவ்விஷயம் நிச்சயம் நிகழக்கூடியது அல்லாஹ்வின் நடைமுறை இதுவேயாகும். இறைவனால் எந்த மக்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ அவர்களே உயர்வை மேன்மையைப் பெறுவார்கள். எனவே நமக்கு ஒருபோதும் ஆச்சரியமே இல்லை. நமது சீடர்கள் இப்போது செல்வந்தர்களாக இல்லாவிடினும் ஒரு காலத்தில் செல்வந்தர்களாக மாறுவர். ஆனால் நமக்கு கவலை ஏற்படுத்தும் விஷயம் என்னவென்றால் பிறகு உலமாக்கள்போன்றே ஆகி இவர்களும் உலகத்தில் மூழ்கி உலகத்திற்கு முதன்மை வழங்கி விடக் கூடாது என்பதாகும்.

எனவே இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கவலை ஆகும். அஹ்மதிகளுக்கு உலகியல் மேன்மை நிச்சயம் கிடைக்கும். நிச்சயம் வழங்குவான். ஆனால் அந்த மேன்மையடையும் காலத்தில் உலகிற்கு முதன்மை வழங்கி அல்லாஹ்வை விட்டும் கவனமற்றவர்களாகி விடுவார்களோ என்பதே அன்னாரின் கவலையாக இருந்தது.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் அவரது பொறுப்பை சரியாக நிறைவேற்றும் தகுதியை வழங்குவானாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஜமாஅத்திடம் இருந்த எதிர்பார்ப்புகளை முழுவதும் நிறைவேற்றும் வாய்ப்பினை வழங்குவானாக.

அவர்கள் கவலையை வெளிப்படுத்திய தீமையியிருந்து ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக. நாம் எப்போதும் அன்னாரின் துஆவுக்கு வாரிசாகிக் கொண்டே இருப்போமாக. அல்லாஹ் அவ்வாறே செய்வானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 06.03.2009**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**